# இந்துசாதனம்

விரோதி வருஷம (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௪] யாழ்ப்பாணம்:- நந்தன ஹூ ஆவணிீ ௨௧௨ வெள்ளிக்கிழமை (5 Sept. 1952) [இல - ௬௦]


பரமேஸ்வரக் கல்லூரிச்

## சைவத்தொண்டர் படை

பரமேஸ்வரக் கல்லூரியில் சைவத் தொண்டர் படை ஒன்றின் அங்குரார்ப்பண விழா சென்றபுதன்கிழமை (27-8-52) பிற்பகல் ஆசிரியர் திரு. மூ. ஞானப்பிரகாசமவர்களது தலைமையில் நடைபெற்றது. உயர்தரவகுப்பு மாணவர்கள் 25 பேரளவில் தொண்டர் படையில் சேர்ந்து தொண்டாற்றுவதற்கு முன்வந்திருக்கின்றனர். தலைவர் தம் முன்னுரையில், எங்கள் சைவக் கோயில்களும், பள்ளிக்கூடங்களும் சைவ அடிப்படைக் கொள்கைகளிலிருந்து திறம்பாது தொண்டாற்றுமாயின் சைவத் தொண்டர்படை என ஒன்று தேவையில்லையென்றும், அவைகள் சைவ அடிப்படைக் கொள்கைகளை உணராது தத்தளிக்கின்றமையினுல் ஒவ்வொரு சைவப் பாடசாலையிலும் சைவத் தொண்டர் படை இருக்கவேண்டியது அவசியமென்றும் குறிப்பிட்டார்.

மேற்படி சபையின் காரியதரிசியாக திரு. கு. பூபாலசிங்கம் அவர்களும், தனுதிகாரியாக திரு. திரு. க. உமாமகேஸ்வரன் அவர்களும் சபையோரால் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இச் சைவத்தொண்டர் படையின் பிரதான நோக்கங்களாவன:—

1. பற்றையும் செடியும் செம்மிச் சீர்குலைந்து தேடுவாரற்று இருக்கும் சைவக் கோயில்களை ஆண்டவனிருக்கும் புனித நிலையங்களாக மாற்றுவதற்கு இப் படையானது முகாமிட்டு, தம்மாலியன்ற கைத் திருத் தொண்டுகளைச் செய்யும்.

2. அறியாமையின் அடிப்படையிலிருந்து சைவசமயத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக நிலவும் ஆடு, கோழி பலியிடும் கொடிய வழக்கத்தையும், கோயில்களிலுள்ள அருட்திருமேனிகளில் (செபற்கையாக) கை, கால் வைத்துக் கட்டும் ஆபாச வழக்கத்தையும் தடுக்கப் பலவகையிலும் இப் படையானது முயற்சிசெய்யும்.

3. வாரந்தோறும் இப் படையானது கூட்டம்நடாத்தி, சைவசமயவளர்ச்சிக்கு வேண்டிய ஒழுக்க விசேடங்களைத் தீர்மானித்து, தீர்மானித்தவற்றைப் படையினர் தம் வாழ்விலும் ஏனைய சைவ அன்பர் வாழ்விலும் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு ஏற்ற தொண்டைச் செய்யும்.

4. திருவிழாக் காலங்களில் கோயில் நிர்வாகிகள் விரும்புவாராயின், இப்படையினர் தங்கள் அட்டைசுவரிய, அட்ட மங்கலக் கொடிகளுடனும், நந்திக்கொடிகளுடனும், சென்று சைவ அணிவகுத்து சுவாமி எழுந்தருளும்போது தேவாரபாராயணஞ் செய்தல், தூபமிடுதல், தீபம் தாங்குதல் "பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்குப் பல்லாண்டு கூறி" பனிநீர் தெளித்தல், அறுகுவீசுதல், பூக்கள் சொரிதல், முதலிய சிவ கைங்கரியங்களைத் தம்மாலியன்றவரை செய்வர்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

---

உன்னைக் குறுகினேற்கு இனியென்ன குயையே!

திருச்சிற்றம்பலம்.

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
யெனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்தோ ரிருளிற் றெளிந்தது வெளியே
திருப்பெருந் துறைஉறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

திருச்சிற்றம்பலம்,

— திருவாசகம், கோயிற்றிருப்பதிகம்

---

# அன்பின் அதிசயம்

## அதுவே சிவம்

அன்பின் அதிசயத்தை விபரிக்கமுடியாது. இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாததாயிருப்ப தொன்றுண்டானுல் அன்பைத்தான் நாம் சொல்ல வேண்டும், ஏனெனில் அதற்கிணையாக வேறெதையும் நாமறிந்ததில்லை. அன்பாலேயே அனைத்தும் பிணைக்கப்பட்டிருக்கின்றது. அன்பு நீங்கினுல் எல்லாம் நீங்கினதாயிற்று.

அன்பு பெரியோரியல்பினென்று என்றார். ஆனல், அன்பு பெரியோரியல்பின்னென்றல்ல, முற்றுமென்றே சொல்ல வேண்டும். அன்பில்லாதவர் பெருமையைக் கிட்டவும் முடியாது உலகங் காக்கப்படுவதும் அவ்வன்பாலேதான் அன்பின் உதவியைக் கொண்டே சகல விவகாரங்களும் சிரடைகின்றன. இல்வாழ்வைத்தன்னும் இலங்கப்பண்ணுவது அனபல்லவோ!

உலகில் நாமின்புற்று வாழ வேண்டுமானுல், எமது சீவியம் அன்புமயமாயிருத்தல் வேண்டும். அன்பினும் மேலான செல்வத்தை உலகில் நாம் தேடியுங் காணமுடியாது. மனிதனிடத்திலுள்ள சகல நற்குணங்களும் அனபின் விளைவே. மனிதனையும் மனிதனையும் இணைபிரியா நண்பாக்குவதும் அவர்களுக்கிடையில் ஐக்கியத்தையும் விசுவாசத்தையும் உண்டுபண்ணி, அவை நாளாந்தம விருத்தியடையச் செய்வதும், அவ்விருவருக் கிடையேயுள்ள பரஸ்பர அன்பேயாம். ஒருவரோடொருவரின் சேர்க்கையால், அவர்களுக்கிடையில் யாதொரு வித்தியாசத்தையும் பிறர் காணமுடியாதளவுக்கு அவர்கள் ஈற்றில் மாறிவிடுவார்கள். பார்த்தவர்கள் எல்லோரும் அவர்கள் ஈருடலும் ஓருயிரும் என வியந்து அவர்களைப் பாராட்டுவார்கள்.

அச்சம் நீக்கும்

தம்மிலே தன் [illegible] மற்றவர்களாய், [illegible] காளே உயிர்கள் சதா தன் பத்திலேயே கழிக்கச் செய்யும் அச்சம் என்னும் பிசாசை உலகத்திலிருந்து முற்றுக நீக்கக்கூடியது அன்பு ஒன்றுமே. அன்பு வேருன்றினவிடத்திலே அச்சம் என்பது முளைக்கவும் முடியாது. அன்பு மட்டுமே தைரியத்தைக் கொடுக்கக்கூடியது. அன்பு எனும் மூலதனம் இருப்பதனுலேயே எமது நண்பரிடத்தில் நாம் எதையும் சாதிக்க முடிகிறது. நம்மிடத்தில் எதுங் குறைகளிருந்தாலும், எம்மிலன்புள்ளவர்களுக்கு அவைகள குறைகளாகத் தோன்றுது. குழந்தை தன தாயை அடித்தாலுமென்ன கடித்தாலுமென்ன, தாயானவள் தன் குழந்தையை வாரியெடுத்து முத்தமிடுவாளேயன்றி அதைச் சற்றேனும் ஊடிக்கொள்ளமாட்டாள். தன் பிள்ளை தன்னை நேசிக்கிறதா இல்லையா எனும் பிரச்னை அவளிடத்திலே எக்காலத்திலும் கிளம்புவதில்லை. அவளுடைய அன்புக்கோர்

( சிவதொண்டன் )

அளவேயில்லை. குழந்தையும் எதைக் கண்டஞ்சினுலும் தன் தாயிடமே போய்ச் சரணடையும். தன் மாதாவின் மடியில் அல்லது தன் தந்தையின் தோளில் உல்லாசமாக வீற்றிருக்கும்பொழுது அச்சம் என்பது குழந்தைக்குச் சற்றேனும் கிடையாது தனக்கு வேண்டியவை யாவையுந் தான் பெற்றுவிட்டதுபோல, அதற்கோர் பூரிப்புண்டாகும். மழலைமொழிகளால் தன் ஆனந்தத்தைத் தெரிவிக்கும். அதன் உள்ளம் சாந்தியை யடைந்து அது சுகமாகவுறங்கவும் ஆரம்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

---

## கல்லோயாக் கலகங்கள்

கல்லோயாவிலே காலத்துக்குக்காலம் கலகங்க ளுண்டாகின்றன. அணிமையில் மிகப் பயங்கரமானதாய் ஒன்று நடந்ததாம். இவற்றுக்குக் காரணங் காண முயலுகையில் அவ்வூர் மக்களுக்கு இடங் கொடாது பிறவூரவர்களை அரசாங்கம் குடியேற்றுவதென்று கூறப்படுகின்றது. இது நுணுகி ஆராய்ந்தறிய வேண்டிய ஒரு பெரும் விஷயம்.

## மலான் மனச்சமாதானம்

தென் ஆபிரிக்காவிலே தாம் விளைக்கும் நிறத்துவேஷ நீதியீனங்களுக்கு Dr. மலான் ஒரு மனச் சமாதானங் கண்டிருக்கிறார். அது இந்தியாவிலே பெருந்தொகை மக்கள் தீண்டாமையால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதாகும். ஆனல் தீண்டாமை முதலியவற்றை ஒழிக்குஞ் சட்டங்களையே எடுத்துக்காட்டி இந்திய காரியாலயத்தார் அவருடைய சமாதானத்துக்குப் பங்கம் விளைத்துவிட்டனர்.

## பாரதி விழா

அநுராதபுரத் தமிழ்க் கழக ஆதரவில் விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் 6-9-52 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மேற்படி விழா, ஆரம்பமாகி நடைபெறும். அத்தருணம் செல்வி கமலா நாகமுத்து அவர்கள் பாரதி பாடல்கள பாட திரு. வித்துவான். கா. பொ. இரத்தினம் அவர்கள பாரதி என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

---

## கூட்டுப் பிரார்த்தனை

இன்று (5-9-52) மாலை 6-30 மணிக்கு அநுராதபுரம் விவேகானந்த சபை ஆதரவில் ஸ்ரீ கதிரேசன் கோவில மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை ஆரம்பிக்கப்படும். அத்தருணம் திரு. K. V. S. சுந்தரம் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## உள்நாட்டுக் காரியதரிசி

உள்நாட்டு மந்திரியின் காரியதரிசி திரு. M. சேனநாயக தம் பதவியை விடுகின்றார். உணவுப்பகுதிக் கொள்கை வேறுபாடு காரணமென அறியவருகிறது.

## இலங்கை இசை வல்லுநர்

இந்திய இசை வல்லுனருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஒரு சிலர் புறநீங்கலாக இலங்கை இசையாளர் திறமை மிகக் குறைவாயிருக்கின்றதென்றும், அதற்குக் காரணம் வேண்டிய வசதிகள் இல்லாமையே யென்றும் பேராசிரியர் திரு. [illegible]

---

அரசியல் அலை

# கல் ஓயாக் குடியேற்றம் கண் கட்டு வித்தையா?

## அரசாங்கம் ஏன் அறிக்கை விடக்கூடாது?

பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னும் பின்னும் கல்லோயாக் குடியேற்றத்தைப்பற்றிப் பலரும் பலவாறுகப் பேசியிருக்கிறார்கள. உண்மை என்னவென்றெருவரும் திட்டவட்டமாகக் கூறமுடியாமலிருக்கிறது. இந்த அலுவல் முழுவதும் மர்மமாகவே தோன்றுகிறது.

கல்லோயாவிற் குடியேறக்கூடியவர்கள் யார். அந்தப் பகுதிகளில உள்ளவர்களா? அன்றிப் புறஇடங்களில் உள்ளவர்களா?

இதுவரை எத்தனை குடிகள் அங்கு போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் குடியேறியிருக்கிறார்கள். அந்தவூர்ப் பிறந்தார்கள் எத்தனை? உரிமை பெருதிற்கும் அந்தவூர்ப் பிறந்தார்கள் எத்தனை. என்ற புள்ளிவிபரங்களை அரசாங்கம வெளியிட்டால் செய்திகள் பத்திரிகை விமர்சனங்கள் பொய்யா மெய்யாவென் றறியக்கூடியதாயிருக்குமே.

அரசாங்கம் புள்ளிவிபரங் கொடாது பொதுமுறையில் எல்லாம் நல்லாய் நடைபெறுகிறதென்று சொல்லிவிட்டாற் போதாது. கொள்கை வாய்ப்பேச்சில் ஒன்றுகவும், செய்கை முறையில் இன்னொன்றுகவும் இருப்பது என்று அரசாங்கத்தின்மீது சுமத்தப்பெறும் குற்றத்தை அரசங்கம் அப்படியல்ல என்று எடுத்துக்காட்டாமலிருப்பதாசங்க மதிப்புக்காகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞு ஆவணிமீ
உக உ வெள்ளிக்கிழமை

## பட்டினி போடுவது யாரை?

— —

வெள்ளம் வந்துவிட்டது; அணை கட்ட முடியாது; ஆகையால் அழிந்துபோக வேண்டியது என்றதுபோலிருக்கிறது இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார நிலை. ஆறாண்டுத் திட்டம் அற்புதங்களைச் செய்கின்றது. செய்யவிருக்கின்றது என்றார் நிதி மந்திரி. அவரின் நம்பிக்கையான நல்லெண்ணத்தின் விளைவை எதிர்பார்க்கலாம் என்றே நாமும் எதிர்பார்த்தோம். இப்பொழுது நோக்குமிடத்து பொருளாதார நிலை நெருக்கடியாகி விட்டது போலத் தோன்றுகிறது. வரவின் மிக்க செலவு செய்கின்றவர்கள் கடன்படுதலும் கலங்கிய நெஞ்சத்தோடு கண்கலங்கிக்கொண்டிருப்பதும் சாதாரண வாழ்க்கையிலே காணப்படுவதுபோல அரசாங்கம் இந்திர வாழ்வு நடத்திக்கொண்டு மித மிஞ்சிய செலவு செய்து வந்ததன் பயனாக இந்நிலைமை விளைந்துவிட்டதென்றின்னமும் தலைவர்கள் அறிந்திலர்போலும்.

அயல்நாடுகளில் அரிசிப் பஞ்சம் நிகழ்ந்த காலத்தும் இந்நாட்டில் அரசாங்கம் அளவு அரிசிப் பங்கீட்டைக் குறைக்காமலும் அதற்குரிய விலையைக்கூட்டிவிடாமலும் ஒழுங்குகள் எடுத்துப் பொதுசனங்களுக்குப் போதிய ஆறுதல் அளித்தது. இதற்காகவே அரசாங்கம் பொதுசனத்தின் நன்மதிப்பையும் பெற்றது.

இப்பொழுது அளவு அரிசி விலையை அளவுகடந்து இரண்டு மடங்கு அதிகரிக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆலோசனை செய்வதும் நிதி மந்திரியார் மதிமொழி பகர்வதும் பொதுசனங்களுக்குப் பெரிதும் பரபரப்பை உண்டாக்குகின்றன. அரிசி விலையை ஏற்றாதீர்கள் என்று சொன்னது மாத்திரமன்றி அப்புத்திமதியை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாதென்றறிந்து மதவாச்சிப் பகுதிப் பிரதிநிதி திரு M. சேனநாயக தமது பாராளுமன்றக் காரியதரிசிப் பதவியையும் விட்டு அரசாங்கக் கட்சியினின்றும் விலகிவிட்டார்.

நிதி மந்திரியார் என் செய்வார்! பொதுசனத்தை விரதமிருக்க வேண்டுகின்றார். நெருக்கடியான நிலைமையில் உணவை ஒறுக்க வேண்டியது முறையே. ஆனல் ஆர் பட்டினி கிடந்து முன்மாதிரி காட்ட வேண்டும்? வாரத்துக்கு வாரம் நாளுக்குநாள் விருந்து வைப்பதிலும் புறநாட்டுப் பிரதிநிதிகளை உபசரிப்பதிலும் களியாட்ட வைபவங்கள் கொண்டாடுவதிலும் எவ்வளவு உணவு வீணுகின்றது. ஒரு பிடி அன்னம்தானும் உண்ண வழியின்றி உடல் வாடுகின்ற ஏழைகள் நாவிற்றடவும் கூழையுமா குறைக்கச் சொல்லிக் கேட்கின்றார் நிதி மந்திரியார்? விருந்து மேடைகளிலிருந்து வீழும் பருக்கைகளே எத்தனையோ ஏழைக் குடும்பங்களின் பசியையாற்றப் போதியனவாகுமே.

பொதுசனம் மதிமயங்கவில்லை. விதிவசத்தால் நாட்டில் பஞ்சம் உறுமேயானல் வெந்ததேதாயினும் பகிர்ந்துண்பார்கள். ஆனல்பொருளால் மருள்படைத்த செல்வர் பஞ்ச காலத்திலும் பஞ்சணைமீதிருந்து அறுசுவை உண்டியுய் ஆடம்பர வாழ்வும் நடத்துவதைப் பார்த்துச் சகிக்கமாட்டார்கள்.

அமெரிக்கா பிரேசில் எகிப்து முதலிய இடங்களிற் பன்மடங்கு விலை கொடுத்து விலங்கினத்திற்கும் உதவாத அரிசியைப் பெறுவதிலும் பர்மா, சீன ஆதியாம் ஆசிய நாடுகளிற் கூடுதலான பணத்துக்கு மனிதர் உட்கொள்ளக்கூடிய அரிசியைப் பெற்றாலும் பொதுசனம் குறை கூறமாட்டாது. பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்தப் பொருள்படைத்த குபேரன்களிடத்தும் ஏழைகள் இதயந் துடிக்கக் கொள்ளை இலாபம் வைத்துக் கள்ள வியாபாரஞ் செய்யும் வியாபாரச் செல்வர்களிடத்தும் நூற்றுக்கு எழுபத்தைந்து விகிதம் வருமானவரி இட்டு அரசாங்கம் பணம் பெறவேண்டும். வருமானவரி வலைக்ககப்படாது போலிக்கணக்குகள் காட்டும் தந்திரிகளைத் துப்பறிந்து ஆயிரக்கணக்கான தொகை குற்றப் பணமாக எடுத்தல் வேண்டும். பொதுவான வாழ்வுக்குரிய இன்றியமையாதனவற்றை விட மற்றைய பொருட்களிற் கூடுதலான இறக்குமதி வரி இடப்பட வேண்டும். இவ்வாறு ஒழுங்குகள் பல செய்யப்பெற்ற பின்னரும் நிலைமை பயங்கரமாக இருந்தால் ஏழைகளும் தியாகஞ் செய்யத் தாமாகவே இசைந்துவிடுவார்கள்.

அரைப்பட்டினியாயிருப்பவன் முழுப் பட்டினியாயிருப்பதா, அல்லது வயிறாரவுண்டு ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கும் குபேரர்கள் ஒரு நேர உணவை ஒறுக்கவேண்டியதா? எது முறை?

# அறிவுலகில் நடமாடி நின்ற வள்ளுவன் உள்ளம்

## எக்கால இலக்கியம் ஆகினும் எமக்கென்ன?

வித்துவான்
த. வடிவேலு

### வள்ளுவன் மாண்பு

வள்ளுவன் பிறப்பு இத்தகையது என எண்ணுவோரெண்ணியவாறு உரைக்கப்படினும் உறுதிகொண்ட தமிழகத்தில் அறிவுகொண்ட உரை பகர்ந்தோருள் உயர்ந்தோன் அவன் ஒருவனேயாதல் ஒருதலை. வள்ளுவன் காலத்தால் முன்னே பின்னே வாழ்ந்தானென்ற வாதத்தால் அவனது உயர்வு குன்றிவிடப்போவதில்லை. வள்ளுவன் நம்கூடவே உறைந்து இக்காலத்திலேயே அருங்குறளை ஆக்கித் தந்தானெனினும் அவன் பெருமை ஆதிகாலப் பெரும் புலவர் பெருமைக்கு ஒத்ததாகாது மேத்த நிற்பதையே காணலாம். மடமை கொண்ட மக்களால் யாக்கப்பட்ட சாதிகள் பலவற்றுள் எவ்வித இழிசின வகுப்பில் பிறந்தான் எனக் கூறப்படினும், அவன் பிறப்பு எழுமையுந் தொடர்ந்த அறிவின் வழிவந்த அருந்தவப் பிறப்பேயாகும்.

ஒப்புயர்வற்ற புலவர் பெருமக்களனைவரும் அறிவுத்திறன் கொண்டு யாத்த எம்மொழி நூலும் வள்ளுவனறிவைத் தாண்டி அப்பாற் செல்லும் ஆற்ற லிழந்தமையை, எம்மொழியாளரும் வள்ளுவன் குறளைப் போற்றித் தம்மொழியிலவற்றை ஆக்குவித்த பெருநோக்கால் அறிதல்கூடும். பலபாடல் கொண்டு ஒருகதை புனைந்து உய்த்துணரவைக்கும் ஒரு புலவனினுள்ளத்தை எழுசீர்கொண்ட ஈரடியில்லடக்கும் திறல்கொண்ட வள்ளுவனுள்ளத்தையே இன்றுங் காண்கின்றோம்.

வள்ளுவன் எக்காலத்திருந்தான்? அவன் காலத்தோர் யாவர்? என அறிந்துகொள்ளுமாறு அவன் தனது வரலாற்றைக் கூறிச் சென்றானல்லன். அவனது கருத்துக்களை அப்படியே எடுத்தாண்ட பிற ஆசிரியர்களின் நூல்கொண்டு அவன் காலத்தை அளந்தறிய முற்படலும் அறியாமையே. பல்லாயிரமாண்டுகட்கு முன் வாழ்ந்தோர் கருத்துக்களை இக்காலப் புலவனொருவன எடுத்தாளுவானானல் அக்கருத்துக்களைத் தந்த ஆசிரியனும் இக்காலத்தோனாகும் அண்மையிலிருந்தோனேயென்று அறுதியிடல் பொருத்தமாகாது. அவன கருத்துக்களை எடுத்தாண்டோனுக்கு முற்பட்டோன் எனவே கூறமுடியும். வள்ளுவன் குறளினை அப்படியே தமது நூலில் எடுத்தாண்ட சீத்தலைச்சாத்தனாரின் காலத்தை நோக்குமிடத்து வள்ளுவன் கி. பி 2ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவன் - மணிமேகலை இயற்றப்பட்ட காலத்துக்கு முற்பட்டவன் என்றே கூறமுடியும். "...... ...... ...... தீரா" என்று தொல்காப்பிய உரையை வைத்துக்கொண்டு வள்ளுவன் தொல்காப்பியருக்கு முற்பட்டவன் என்று கூறினும் அதனை மறுத்துரைத்தலும் இயலாத காரியமே. வள்ளுவன் பிறப்பாலோ காலத்தாலோ எவ்வாறு பிற்படினும் அறிவினல் உலகினையே விறல்கொண்டான் என்றால் அது மிகையாகாது. அவன் பிறப்பு அறிவுந்த கடவுளின் அவதாரமே என எண்ணிலும் அதுவும் மிகைபடுதலின்றாம்.

ஒருமைக்கட்கற்ற கல்வியால் எழுமையுந் தொடர்ந்த அறிவு கொண்ட பிறப்பாளரே உயரிய நூலினை அறிதல் சாலும். அன்றி ஓரேவழிக் கற்றுக்கேட்ட சில உரைகளை உணர்ந்தோர் ஆழ்ந்த அறிவின்றி உயரிய வழிகூறும் நூல் இது உதவாக்கரை நூல்களிவை எனப் பகுத்தறிதலியலாததொன்றாம். எவ்வினத்தினரும், எக்காலத்தினரும் போற்றும் பாங்கில் நூலுரைத்துச் சென்றோன் வள்ளுவன் ஒருவனேயாவன். உலக மக்கள் அனைவர் முன்னிலுமே அறிவுடை மகனாக நிற்கின்றான் என்பதனை, எல்லோர்க்கும் ஒருவனே கடவுள் என்ற அறிவுள்ளத்தால் நூலுக்கு முன்னுரைத்த கடவுள் வணக்கமே எவர்க்கும் எடுத்துக் காட்டுகின்றது.

### கடவுளடி காட்டும் மாண்பு:

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்ற கடவுள் வணக்கப் பாவுடன் நூலினைத் தொடங்குகின்றார். அழியா நிலைத்தாய மொழிகளெல்லாம் 'அ' என்னும் எழுத்தை முதலாக உடையன. அதேபோன்ற அழியா நிலையுடைய உயிர்களனைத்தும் ஆதியாகிய கடவுளொருவனை முதல்வனாகவுடையன என்ற கருத்தினை எடுத்துக் காட்டி, அழிவு நிலையுடைய மொழிகளுக்கோ, உடல்களுக்கோ, உயிர்ப்பற்ற பொருள்களுக்கோ அழியா நிலையுடைய முதலான பொருளில்லை. அவை அழியும் நிலையுடைய முதற் பொருள் கொண்டே ஆக்கம் பெறுகின்றன, பின் அழிவுறுகின்றன என்பதனை விளக்குகின்றார். 'அ' என்ற முதலையுடைய தமிழ் மொழி ஆதி தொட்டு இன்றுவரை அழிந்தொழியவில்லை. இனிமேலும் அழிந்தொழியப் போவதில்லை. உயிர்களும் என்றும் அழியுந்தன்மையுடையா. அவை என்றும் நிலைபெற்றுப் பல உடல்தோறும் வாழ்ந்து இறுதியில் அழியா நிலையுடைத்தாய கடவுளையே அடைகின்

தொடர்ச்சி 3 ம் பக்கம்

# சரியை வழிபாடு

= தொண்டன் =

கெ. ஆறுமுகநாவலர் அவர்கள்.

மக்கள் திருவருளை அடைவதற்கு ஆலயம் அவசியம் வேண்டும். ஆலயம் என்பதற்கு ஆன்மா இறைவனிடம் படிவதற்குப் பயன்படும் இடம் என்று பொருள். ஆணவமலம் அடங்கி இருப்பதற்குப் பயன்படும் இடம் எனவும் பொருள் கூறலாம். ஆலயத்தினுட் செல்லும்போது மனம் வேறு எல்லா விஷயங்களையும் விட்டு கடவுளையே நினைந்து சார்ந்து நிற்கும். அங்கு வணங்க வரும் அடியார்களைக் காணும்போது நமது ஆணவம் அடங்கும்.

எங்கும் நிறைந்து விளங்குகிற இறைவனைக் குறிப்பிட்ட ஓர் தூய இடத்தில் திருவுரு அமைத்து வழிபாடு செய்வது உருவ வழிபாடாகும். அத் திருவுருவத்தைக் கடவுளாகப் பாவித்து ஒழுங்கான முறையில் பூசைகளை நடத்தி வழிபட்டால் இறைவன் அத்திருவுருவில் எழுந்தருளி அருள் புரிகின்றான்.

ஆலயம் நமது உடம்பைப் போல் ஆக்கப்பட்டிருக்கிறது. உடம்பின் உள்ளிருக்கும் உத்தமனைப்போல கோவிலினுட் கடவுள் இருக்கிறார். நமது பருவுடலைக் கோபுரமும், நுண்ணுடலைக் கொடிமரமும், காரண உடலைத் திருவுருவமும் காட்டுகின்றன. நமது உடம்பினுள் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான கோசம், ஆனந்தமய கோசம் என்ற ஐந்து கோசங்கள் இருப்பது போல கோயில்களில் ஐந்து பிரகாரங்கள் இருக்கின்றன. இக் கோசங்களைக் கடந்து கடவுளைக் காணவேண்டுமென்பதை பிரகாரத்தைச் சுற்றி வருதல் உணர்த்துகிறது.

ஆலயங்களில் வழிபடச் செல்பவர் நீராடி, தூய ஆடை அணிந்து, சமயச் சின்னங்களைத் தரித்து, தோத்திரங்களை ஓதிக் கொண்டு செல்லவேண்டும். கொடிமரத்தின் பக்கத்தில் விழுந்து வணங்கி, பிரகாரங்களில் வலம்வந்து கோவிலினுட் செல்லவேண்டும். அங்கிருக்கும் மூர்த்தியை இறைவனாகவும், மூர்த்தியின் எதிரிலிருக்கும் உருவத்தை ஆன்மாவாகவும், அதன்பின்னிருக்கும் பலிபீடத்தைப் பாசமாகவும் நினைக்கவேண்டும். உயிர் கடவுளைத் தியானித்துப் பாசத்தைக் களைகின்றது என்பதை இம்மூன்றும் விளக்கும்.

கோயிலிற் கடவுளை வழிபடும்போது அவர் திருவுருவைக் கண்ணால் உற்றுநோக்கி சிந்தையால் தியானித்து சாந்த குணத்துடன் தோத்திரங்கள் பாடி கண்ணீர் சொரியக் கசிந்துருகி வழிபட வேண்டும். அங்கு தரும திருநீறு முதலிய பிரசாதங்களை இறைவன் திருவருள் பெற்றதாகவே நினைந்து உடம்பில் தரித்து ஏனைய மூர்த்திகளையும் தோத்தரித்து, கோபுரவாசலுக்குச் சென்று வணங்கி; இருந்து கோவிலினுள்ளே கண்ட திருவுருவத்தைத் தன்னுள்ளே கண்டு களித்து வணங்கி பலமுறை திருவுருக்களை செபித்து, பின் எழுந்து செல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் மொழி மெய் - அன்பு

ஞானவாசகமுரைத்தமாணிக்கவாசகசுவாமிகள் (முக்கரணங்களாலும் முக்கண்ணன் திருவடிக்கண் ஈடுபடாமை) கண்டு 'சிற்பேனை ஆட்கொண்ட பெய்கழல்கீழ் விரைபார்ந்த மலர் தூவேன் வியந்தலறேன் நயக்கருகேன்' என்று இரங்குகின்றார்.

மனம் மொழி மெய்களைத் தன் வயப்படுமாறு செய்தலைத் திருவாசகத்தேன் சொரிந்த செந்தமிழார்

"சிந்தனைநின் தனக்காக்கி
நாயினேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப்
போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே
யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம்
புலன்கள் ஆர... ... ...
... ... ... ... ... ...

என்றினிதுரைத்தார்.

ஆடல் பாடல் பதைத்தல் என்னும் முச்செயல்களும் முக்கரணங்களால் நிகழ்வனவாகும் நீர்மையற்ற பிண நெஞ்சை விளித்து

ஆடுகின்றிலை கூத்துடை
யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ்
செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை

துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவு தோ
றலறிலை செய்வதொன் றறியேனே

என்று சோர்ந்த செய்வதொன்றறியாது நிற்கின்றார் அடிகள்

## பழைய சட்டசபை அங்கத்தவர் பிரிவு

திரு. க. பாலசிங்கம்

பிரபல நியாயவாதியாகவும் சட்ட நிருவாகசபை சட்ட நிருபண சபை அங்கத்தவராகவும் சட்ட நூல் ஆக்கியோனாகவும் விளங்கிய தமிழ்ப் பெரியார் திரு. கதிரவேற்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் கொழும்பிலே இன்று தமதில்லத்திலே தேகவியோகமாயினர் என்றறிந்து வருந்துகின்றோம்.

இலங்கை அரசியல் முன்னேற்றத்தில் முக்கியமான பங்கெடுத்தவர்களில் திரு. பாலசிங்கம் அவர்களும் ஒருவர். இப்பொழுது நடைமுறையில் உள்ள பொதுசன நன்மைக்கான பல சட்டங்கள் இவரின் முயற்சியினாலேயே ஆக்கப்பட்டன எனலாம்.

# அணிந்துரை அரங்கம்

### திருக்குறள் — உரைவளம் (காமத்துப்பால்)

ஏறக்குறைய 530 பக்கங்களுள்ள தருமபுர ஆதீனத்தின் ஒரு மிகச் சிறந்த வெளியீடு. திருக்குறள் ஆராய்ச்சி, திருக்குறள் உரைவளம் என்னும் இரு பிரிவுகளை யுடையது. "திருக்குறள் உரைவளம்" எனப்படும் நூலெனினும் திருக்குறள் ஆராய்ச்சியே ஒரு தனி நூலாம் சிறப்புடன் விளங்குகின்றது. இது, திருக்குறளின் தொன்மை, பெருமை, தன்மை, பெயர், பெயர்களும் பெயர்க்காரணங்களும் முதலிய பொருள், முதலிய பொருளின் பலதிறச் சிறப்புக்கள் ஆகியாம் பல அரிய பொருள்களைத் தன்னகத்தே கொண்ட அறிவுக் களஞ்சியத்தின் நிறவுகோலாயமைகின்றது. இனி, திருக்குறள் உரைவளமோ, பரிமேலழகர் பரிப்பெருமாள், பரிதியார், காளிங்கர், மணக்குடவர் முதலிய தொல்லாசிரியர் கருத்துக்களை எல்லாம் ஒருங்கே தந்து 'அறத்தினூஉங் காக்கமுமில்லை அதனை மறத்தலினூங்கில்லைக் கேடு" என்றபடி மக்கட்பிறவியின் மாண்பைத் தருவது அறமேயாகலின், அவ்வறமே திருக்குறளின் பிறபாகங்களில் மாத்திரமன்றி உடலின்பத்தையே குறிப்பதாகக் கருதப்படும் காமத்துப்பாலிலுமே விளங்குமாறு தந்து, அரும் பெரும் இன்பம் பயந்து, வீட்டுக்கேதுவாம் சிறப்பை வெள்ளிடைமலைபோல் தெள்ளிதில் விளக்கி மிளிர்கின்றது. இது தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாக

### இலவச பால் நிலையத் திறப்பு விழா

1-9 52 காலை 9 மணிவரையில் திருநெல்வேலி சைவ வித்தியாசாலை இலவசப்பால் நிலையத் திறப்பு விழா ஸ்ரீமான் M. பாலசுந்தரம் நியாயவாதி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. ஸ்ரீமான் T. இராஜேந்திரா B.A, J.P, அவர்களால் நிலையம் திறந்து வைக்கப்பெற்றது.

ஸ்ரீமார் T. முருகேசபிள்ளை (D R O) ஸ்ரீமார் M. சின்னத்தம்பி (பால் நிலைய மேற்பார்வையாளர்) ஸ்ரீமார் கனகரத்தினம் (V. C அங்கத்தவர்) ஸ்ரீமார் S செல்லத்துரை (தலைமை ஆசிரியர்) ஆகியோர் பால்கொடுப்பதன் அவசியம், கிராமத்தவரின் கடமைகள் முதலிய விஷயங்களை விசேடமாகக் குறிப்பிட்டார்கள்.

விழாவில், ஸ்ரீமார் S. தம்பித்துரை D. J. அவர்கள் உட்படப் பல பிரமுகர்களும் பெண்மணிகளும் ஏராளமான சிறுவர் சிறுமியர்களும் கலந்துகொண்டனர்.

சைவ தருமகாசந்தானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஜன்ம நட்சத்திரவிழா அணிமலராக சுவாமிகள் ஆணையின் வண்ணம் வித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்களால் தொகுக்கப்பெற்று வித்துவான் ஸ்ரீமத் மௌன இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வெளியிடப்பெற்றது.

பெறுமிடம்: மானேஜர், தருமபுர ஆதீனம், தருமபுரம் மாயூரம் போஸ்ட் தஞ்சை ஜில்லா.
விலை, ரூபா 6/= தபாற்கூலி ரூபா. 1/=

# செய்தித் திரட்டு

=0=

பெர்லிக் என்னுமிடத்திலிருந்து லண்டன் வரையில் 365 மைல் தூரத்தை ஒரு இடத்திலும் தரியாது 93 மணி 42 நிமிஷ நேரத்தில் ஒருவர் நடந்தாராம்.

X X X

ஆந்திர இராச்சியம் 2-10-52 ல் ஏற்படாவிட்டால் சுவாமி சீதாராம் என்பவர் இறக்கும்வரை உண்ணு விரதம் மேற்கொள்ளுவாராம்.

X X X

வட இலங்கைத் துறைமுகங்களைப்பற்றி ஒருவாறு ஆராய்ந்த பின் காங்கேயன்துறைத் துறைமுகத்தைத் திருத்தியமைக்கும்படி ஆராய்ச்சி செய்தல் நன்றென்று உலக வங்கித் தூதுக் குழுவினர் கூறுகின்றனர்.

X X X

இலங்கைக் கைத்தொழில் நிர்வாகம் அரசாங்கத்தின் தனிப் பொறுப்பிலிருப்பது நன்றன்றெனவும் அது ஒரு அதிகாரிகள் சபையின் பொறுப்பிலிருக்க வேண்டுமென்றும் உலக வங்கித் தூதுக்குழுவினர் கூறுகின்றனர்.

X X X

பெருந்தொகை வெங்காயம் உருளைக் கிழங்கு வருகையால் அவற்றின் விலை குறையுமாம்.

X X X

கேரளைப் பிரசாவுரிமை வழக்கு வருகிற மாதம் மந்திரிசபை ஆராயுமாம்.

X X X

திரு. டட்லி சேனநாயகா பிரதம மந்திரியாவதற்குக் காரணமாயுள்ள சில விஷயங்களை ஒரு மந்திரி ஒரு வெளியீடு செய்திருக்கிறாராம். குறித்த மந்திரி தமது பதவியைத் தாமாகவே விடவேண்டுமெனக் கேட்கப்பட, அவர் விடாதிருந்தால் மந்திரசபையைக் குலைத்து அவரை நீக்கி ஒரு புதுச்சபை அமைக்கப்படுமாம்.

# அறிவுலகில் நடமாடி நின்ற வள்ளுவன் உள்ளம்

( 2ம் பக்கத் தொடர்ச்சி )

றன என்ற உண்மையை எடுத்து விளக்குகின்றார். நிலை பெற்ற கடவுள் ஒருவனை எனக் காட்டுதற்கே "ஆதிபகவன் முதற்றே" என்கின்றார். அன்றி அவனை ஒரு பெயரிட்டு அழைக்கும் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவனாக நின்று வாழ்த்துரைக்க அவனது அறிவுள்ளம் இடங் கொடுக்கவில்லை. ஒருவனே கடவுளென்ற உயரிய அறிவுள்ளமே அவனை உலக ஆசிரியனாக்கி விட்டது உயிர்ப் பொருள்களைத்தும் வாயை அங்காத்தல் செய்யுமிடத்துத் தோன்றுமொலி 'அ' என்ற ஓரொலியேயாகும். அன்றி வாயைத் திறந்த மாத்திரத்தில் 'எ' என்ற ஒலியோ, ஆசிரியர்கூறும் 'அ'வின நான்கு வித ஒலியோ பிறப்பதில்லை. இதனை எவரும் வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளல் கூடும். எம்மொழிக் கூட்டத்தினர் தம்மொழிக்கு உயர்வு தேட முற்படினும், ஒருவிதவெண்ணமுமின்றியே அறிவு பெற்ற மனிதன் முதல் பகுத்தறிவற்ற உயிர்க்கூட்டம்வரை வாயைத் திறந்தமாத்திரத்தில் 'அ' என்ற ஒலி பிறத்தலையே யாவருங்காணடல்கூடும். உலக முதல் ஒருவனுதல்போன்று உலக மொழியின் முதலானது அகரத்தை முதலாகவுடைய மொழியே என்று கூறி நூல் தொடங்கும் வள்ளுவன் இரண்டாவது பாடலிலே மனிதன் ஏன் பிறந்தான்? என்ற வினாவை எழுப்புகின்றார். மனிதன மாண்புடை யுலகத்தை மங்காநிலையடைவிக்கப் பிறந்தான் உயர்ந்த உலகுகாண - இன்ப உலகு காண உயரிய அறிவு பெறல் வேண்டும். அதற்கு அறிவுதரும் கல்வி பெறல் வேண்டும். அவ்வித கல்வி பெற்ற ஒருவனே கடவுள் நிலையை அறிதல்கூடும். கல்வி கற்றும் அவனது கல்வி இறைவனைக்கண்டு வணங்கி மகிழும் ஆற்றலடைவிக்கா விட்டால் அவன் பெற்ற கல்வி உண்மைக் கல்வியாகாது. அது அழிவு நிலைகொண்ட கல்வியேயாகும்.

கல்விப்பயன் பெறுமொருவன் தன்னறிவு கொண்டு உலகினை உயர்வடைத்தாக்க முறபடல்வேண்டும். உலக ஆக்கம் வேண்டி நிற்போன் தனது கருத்துக்கள் நிறைவேறக் கடவுளின் உதவியை நாடுகிறான். அதற்காக அவன் வாழ்நாள் முழுவதுமே கடவுளின் அடியை வாழ்த்துகின்றான். வழி காண்கின்றான். என்றுமுலகில் வாழ்கின்றான்.

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றாடொழாஅ ரெனின்.

உண்மையறிவினையுடையோன் ஒருவன். அவனே கடவுள். கல்வியறிவு உண்மையறிவு கொண்ட ஒருவனைக் காட்டுகின்றது. அவனையடையாவிட்டாற் கல்வியறிவாற் பயனில்லை. உலகினுக்கே அவன் கல்வியாற் பயனில்லை. ஏன்? கற்ற அவனுக்கே பயனில்லை. அவன் கற்ற கல்வி பயன்தரவேண்டுமானால் அக்கல்வியின் துணைகொண்டு கடவுளின் உண்மைத் தன்மையை அறிதல்வேண்டும். அவனையண்மி அவனடி வாழ்த்தி உலகுய்ய வழிகோலவேண்டும். அன்றுதான் அவன் கற்றதனாலாய பயனடைகிறான். அக்கல்விப் பயனால் உலகுள்ளவரைதானும் வாழ்கின்றான் எனக் கூறிய வள்ளுவன் தனது வாழ்வு கொண்டே கல்வியின் பயனை வலியுறுத்துகின்றான்.

# உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இவ்வாரப் பலன்கள் 7—9—52——13—9—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்தவாரம் தொழிலில் முன்னேற்றம் வரும். சமூக அந்தஸ்து அதிகநன்மை பயக்கும். நன்கு மதிக்கப்படுவீர், வார இறுதிக்குமுன் பிரயோசனமுள்ள புதுத் தொடர்புகளுண்டாகும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்தவாரம் சக தொழிலாளருக்கிடையே வாக்குவாதத்தால் உமது முயற்சியில் தடை ஏற்படக்கூடும். குடும்பத்தொந்தரவுக்குமிடமுண்டு. செலவதிகரிக்கும். சில முதிர்ந்த இனத்தவர் கஷ்டங்களிலிருந்து மீளுக உதவிபண்ணுவார்கள்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்த வாரம் அபூர்வ காரியங்களில் சித்தியும் மனச்சமாதானமும் உண்டு. கடலுக்கப்பாலுள்ளதேசங்களிலிருந்து அல்லது தூர இடங்களிலிருந்து நல்ல புதினம் நிச்சயம். வார இறுதிக்கு முன் காத்திராத இலாபம் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

குடும்ப சீவியத்துக்குச் சிறிது கஷ்டமான வாரம். அவமொழி உரைப்போர் புறங்கூறுவோர் ஆகியவர்களைப்பற்றி [illegible] விழிப்பாயிருக்கவேண்டும். [illegible] துறையில் நல்லகாலம், நல்ல புதுத் தொடர்புகளுண்டுபண்ணக் கூடியதாயிருக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

இந்த வாரம் அதிக கஷ்டமில்லாமல் கருமங்கள் செய்விக்கக்கூடியதாயிருக்கும். புது முயற்சிகள் நல்ல பயனைத்தரும். மைத்துனர் மைத்துனிகளிடமிருந்து அல்லது குடும்பத்தவரிடமிருந்து உதவி நிச்சயம்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வாரத்தின் முதல் மூன்று நாட்களும் அதிக செலவை விளைக்கும். மனநிலையிலும் அதிக துன்பமுண்டாகும். அதிகம் மதிக்கின்ற நட்பு ஒன்று தொந்தரவு தரக்கூடும் புது வியாபார முயற்சிகளைப் பின்போடவும்.

**துலாம்** சித்திரை 3,4ம்பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

வியாபார முயற்சிக்கு ஞாயிறு திங்கள், செவ்வாய் முற்பகல் நன்று. செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்க வேண்டும். கடைசி இருநாட்களும் திரும்பவும் நன்று.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

முதலாளியாயிருந்தால் தொழில் செய்வோரிடையே கஷ்டமான நிலைமை ஏற்படக்கூடும். எல்லா முயற்சிகளிலும் கவனமாயிருக்கவும். எல்லாவற்றிலும் கடைசி இரு நாட்களும் மிகக்கூடாதன.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இந்த வாரம் மிக இன்பகரமானதாயிருக்கும். புது நட்புண்டாகும், பழைய இனத்தவர் அதிக உதவி செய்வர். வார இறுதியில் செலவதிகரிக்கும்.

**மகரராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இது சலனமான வாரமாயிருக்கும், எல்லா முயற்சிகளிலும் பிறர் கையிடுவர். வார இறுதியில் காத்திராத பிரயாணத்துக்கிடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

பணச்சிக்கல்கள் சிறிது காலத்துக்கு இருந்தபடியே யிருக்கும். எதையும் புதிதாய்த் தொடங்குவதில் கஷ்டமுண்டு. நண்பர் உதவி செய்வார், ஆனால் நீர் விரைவில் அவர்களைப் பிழையாய் விளங்குவீர்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இந்த வாரம் அதிக இன்பமும் குடும்ப சமாதானமும் நிச்சயம், செலவதிகரிக்கும். ஆனால் அவற்றுக்குத்தக்க பணம் வரும், வார இறுதியில் சில அவமானத்துக்கிடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அதிசயம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்துவிடும சிவ பத்தர்களும் குழந்தைகள் போலன்றோ!

**அன்பின் அபார சக்தி**

மனிதாராற் போற்றப்படும் சகுணங்களாகிய, நன்றி, பக்தி, நேயம், தியாகம், ஈகை, கருணை, ஆர்வம் முதலியனவெல்லாம் அன்பின் விளைவே. கௌரவர்களிடத்திலே கருணனுக்கிருந்த நன்றியும் பற்றும் போல நாம் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. தன்னை ஆதரித்த அன்புக்காகத் தன் உயிரையுந் தியாகஞ்செய்ய அவன் தயங்கவில்லை. ஈவது விலக்கேல் எனுங் குறிக்கோளைச் சரித்திரத்திலே முதல் நிலை நிறுத்தியவன் கருணனன்றோ!

பக்தி முறையைப் பகிரங்கமாக நமக்கு விளக்கியவர் அன்பாற் பிடிக்கப்பட்ட அனுமாராம். அதன்பின் அடிமையென்றால் ஆஞ்ஞனேயரைத்தான் கூறவேண்டும.

இதிகாசங்களில் மாத்திரமல்ல, புராணங்களிலும், கண்ணப்பர் முதலிய நாயன்மாருடைய திவ்விய சரிதைகளை வாசிக்கும்பொழுது அன்பு எத்தனை மகிமையுடையமதென வதிசயப்பட வேண்டியதாயிருக்கின்றது.

தேசசரித்திரங்களிலே, சிபிச் சக்கரவர்த்தி, மனுநீதி கண்ட சோழன், அசோகன் முதலிய மன்னர்கள் உயிர்களிடத்தில் தமக்கிருந்த அன்பைத் தமது அபூர்வ செயல்களால் காட்டியிருக்கின்றார்கள்.

தன் அந்திய காலத்தில், தொண்டை நோய் வாய்ப்பட்டு ஆபத்தான நிலையில் அவர் உடலிருந்த பொழுதிலும், அவருடைய சீடர்கள் அவரைத் தடுத்து, எவ்வளவு வேண்டியிருந்தும், தன்னை நம்பிவந்த பக்தர்களுடன் சம்பாஷிப்பதைக் கடைசிவரையும் ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமகம்சர் நிறுத்தினதில்லை.

ஸ்ரீ ரமண மகரிஷிகளும் அவ்விதமே தாங்கமுடியாத புற்று நோயாற் பீடிக்கப்பட்டிருந்த பொழுதிலும் கடைசிவரையிலும பக்தர்களுக்குத் தரிசனம் கொடுப்பதை அவர் விடவில்லை.

சிலுவையிற்றொங்கிக்கொண்டே தன்னைச் சிலுவையிலறைந்தவர்களை மன்னிக்கும்படி தன் பிதாவிடம் இயேசுக்கிறீஸ்துநாதர் மன்றாடினாராம்.

புத்தபகவானுடைய அடியானாகிய ஓர் ஏழைக் கம்மாளன் தன் வீட்டில் விருந்துக்கு வரும்படி அவரையும் அவருடைய சீடர்களையும் அழைத்து கண்ணப்பரைப்போல்; தன் அன்பின் மேலீட்டினால தனக்கு விருப்பமான புலால் வகையைச் சேர்த்த உணவைப் படைத்திருந்தானும். அவ்வித உணவு தன் பூதவுடம்புக்குக் கெடுதி விளைவித்துத்தான் அதை விட்டுப் பிரிய நேரிடுமென்று அவருக்குத் தெரிந்திருந்தும், தமது சீடர் அதையுண்ணுமற் றடுத்துவிட்டு, தான்மட்டும் அதை ஏற்றுப் புசித்தாராம்.

**அன்பே அனைத்தும்**

அன்பில்லாமல் ஒன்றும் நடைபெறவில்லை — நடைபெறவும் முடியாது. அன்பில்லாவுலகமொன்றை நாம் சிந்திக்கத்தானும் முடியாது. அன்பில்லாவிடில் உலகமே அழிந்துவிடும். அன்பின் அதிசய சக்திதான் பெற்றோர் பிள்ளைகளைப் பராமரிக்க வைப்பதும், பிள்ளைகள் பெற்றோரைப் பேண வைப்பதும், அன்பே குரு. அன்பே சீடனும். அன்பில்லாவிடில் சீடனுமில்லை, குருவுமில்லை. அன்பே மூலவஸ்துவாயிருந்து எல்லாக் காரியங்களையுஞ் செய்து முடிக்கின்றது. எல்லாக் காரியங்களும் சிறந்தனபோலச் செய்வதும் அம்மூலவஸ்துவாகிய அன்பே தான். அன்பே அனைத்துயிரையுஞ் சேர்த்து வைப்பது. அனைத்துயிரையும் பிரித்து வைப்பதுபோலச் செய்வதும் அன்பே. அன்பே கோயில். அன்பே பக்தன். பக்தன் வணங்குவது அன்பைத்தான். அவனுக்கு வரப்பிரசாதமாகக் கிடைப்பதும் அன்புதான். கோயிலின் மூர்த்திகரம் என்று சொல்லப்படுவதும் அதன் அருளாகிய அன்புதான். அடியானின் பக்தி என்று சொல்லப்படுவதும் அதேயன்புதான் அவன் அருளாலே அவன்தாள் வணங்குவதென்பதும் அன்பே. அவனபால அன்னை வணங்கப்பண்ணுகிற தென்பதும் ஒன்றுதான். இங்கும் அங்கும எங்கும் ஒரேயன்புதான் கின்று நர்த்தனம் புரிகின்றது. வணங்குவதும் அன்பு, வணங்கப்படுவதும் அன்பு.

அன்பே அண்ட சராசரங்களை அணைத்தும் பிணைத்தும் வைப்பது. அண்டசராசரங்களாய் விளங்குவதும் அவ்வன்பு. அண்ட சராசரங்களாய் ஆடல் புரிவதும் அவ்வன்பே. ஆகினதே யழியவுங்கூடும். அழிந்ததே யாக்கவும் வேண்டும். ஆக்குவதும் அழிவதுபோலாவதும் அனபே. அன்பே சிவம்.

## அரிசி வரவு

இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள செய்த பேச்சுக்களின் பெறுபேறாக அமெரிக்காவிலிருந்து 40,000 தொன் அரிசியும் இத்தாலியிலிருந்து 12,000 தொன் அரிசியும் இலங்கை அரசாங்கம் பெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பெற்றிருக்கிறதென்று அறிய வருகின்றது.


திறமான

தேக்க மரங்கள்

பல தினிசுகளிலும்

திறமான

ஸ்ரீணிமார்க் ஓடுகள்

$13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

Std. 2 ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம்.


# திருவலம்புரத் தலச் சிறப்பு

கோடியுடை மூத்மதி லுடுநவக்
துனிவேஞ்சி லேதாங்கி
இடிபட வெய்த வமரர்பிரான்
அடியா ரிசைந்தேத்தத்
துடியிடை யாளையோர் பாகமாகத்
துதைந்தா ரிடம்போலும்
வடிவுடை மேதி வயல்படியும்
வலம்புர நன்னகரே

இத் தலம் காவிரித் தென்பால் சோழநாட்டில் 44-வது தலமாகத் திகழ்வது, திருமால் பூசித்துச் சக்கரம்பெற்ற சிறப்பினது. திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கிய ஏரண்ட முனிவர் இங்குவந்து இறைவற்கு வலப் பக்கமாக எழுந்தமைபற்றி வலம்புரம் எனவும், திணைவந்த இறைவர் திருமுடியில் அடியுற்ற பள்ளம் உள்ளமைபற்றி மேலப்பெரும்பள்ளம்எனவும் திருப்பெயர் பெற்றது.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சமயாசாரிய சுவாமிகள் திருப்பதிகம் பெற்ற பெருமையது; அடியார்மேவி வழிபடும் இடம், கல்லாவிலிருந்த இறைவனுறிடம், பழமைப்புகழமைந்த பெரியோர் வாழ்க்கையருத இடம், உணர்ந்தேத்தும் அடியர் உள்நின்று அருளும் எந்தை மேய வலம்புரம் என்று திருஞானசம்பந்தமூர்த்தியும்; நீர்கொண்டும் மலர்கொண்டும் தொடுத்த மாலைகள் கொண்டும் அடியார்களும் மலைமகளும் போற்றுகின்றார்கள்; யானும் ஆனிடை ஐந்தும்கொண்டும் ஆட்டித் தேனுடை மலர் கொண்டு சாத்தி நின்றிலேன் பயனுற்றேன்; பொய்மையே புனைந்து மெய்ம்மையுணரேன்; என் செயல் யாதுமில்லை; வலம்புரவன் நீரே; நீரேதலைவன் என்று திருநாவுக்கரசு சுவாமிகளும், எனக்கும் என்தமர்க்கும் எழுபிறவிக்கும் மனத்திற்கும் இனியவன் மேவிய இடம் இவ்வலம்புரமே; உயிர்க்குறு துணையதாம் புகலிடம் நினையலவேனும் வேண்டுமே; அஃது அறிந்தேன்; சொலகொண்டு அருகுலத் தமிழ்கொண்டு பிதற்றுகின்றேன்; பெருங்குலத்தவர் அவரோம் பிதற்றுதலே பெருமையதாம். எனச் சுந்தரமூர்த்தியும் அருளிப் போற்றிய விளக்கமுடையது.

இறைவன்: வலம்புரிநாதர், இறைவி: வடுவகிர்க்கண்ணியம்மை, இறைவன் முடிமீது பெரியபள்ளம் ஒன்று அமைந்துள்ளதை இன்றும் காணலாம். இங்கு பிக்ஷாடனர் திருவுருவம் மிகவிசேடம் ஆலயம் கிழக்கு நோக்கியுள்ளது. இதனை தக்ஷிணவீரியார்ச்சுன மன்னர் திருப்பணி செய்ததாக வரலாறு கூறும். இம் மன்னர் திருவுருவம் ஒன்றும் இங்கு உளது.

இத்தலம்: ஆக்கூர் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே சுமார் ஐந்துகல் தொலைவில் உள்ளது. தற்போது மேலப்பெரும்பள்ளம் எனப் பெயர்வழங்கப்பெறுகிறது.

தெண்டிரை தேக்கி ஒதஞ்
சென்றடி வீழுங் காலைத்
தொண்டிரைத் தண்டர் கோனைத்
தோழதடி வணங்கி எங்கும்
பண்டுகள் மலர்கள் ஓதும்
வலம்புரத் தடிகள் தம்மைக்
கொண்டுநற்கீதம் பாடக்
குழகர்தாமிருந்த வாறே.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறூப்பர்.



நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம். சாமி

தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும். நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

குரு பஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும்.
அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)

M. 16. 25-4-52—25-10-52.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday, September 5, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org